[திரு. ஆர். மணிமாறன்] [1980 ஆகஸ்ட் 5

ஈடுபட்டால், அவர்களைப் பழி வாங்குகின்ற முயற்சியை நிர்வாகம் மேற்கொள்ளுமா என்ற வினா எழுந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, சமரச அதிகாரியினுடைய ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-30)

(ஆ) கல்சபாக்கம் தொகுதியில், ஒரு கிராமத்தில் விவசாயிகளின் நிலங்களை பொதுப் பணித்துறை எடுத்துக்கொண்டு நட்டயீடு கொடுக்காமல் இருத்தல்.

* திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே,

"வடார்க்காடு மாவட்டம். திருவண்ணாமலை வட்டம், கல்சபாக்கம் தொகுதியில் உள்ள வடபுழுதியூர் மதுரா முனியப்பன்தாங்கல் கிராமத்தில் பொதுப்பணித் துறையினர் பல விவசாயிகளுடைய நிலங்களை கால்வாய் வெட்ட எடுத்துக் கொண்டு நட்ட ஈடு கொடுக்காதது"

குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, வடஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், வடபுழுதியூர் கிராமத்தில், சி. ஆண்டப் பட்டு குளத்திலிருந்து வடபுழுதியூருக்கும், வடபுழுதியூரிலிருந்து அகரம் சிப்பந்திக்குளத்திற்கும் கால்வாய் வெட்டுவதற்காக வடபுழுதியூர் கிராமத்தில் 10.03 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான விண்ணப்பம் ஜனவரி 1979-ல் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் (திருவண்ணாமலை) அவர்களால் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பப்பட்டது. கால்வாய் அமைக்கும் வேலைகளைத் தொடங்குவதற்காக, பொதுப்பணித்துறை இந் நிலங்களை 10—6—1976 அன்று எடுத்துக்கொண்டது. இதில், 6.55 ஏக்கர் நிலங்களுக்கான நில ஆர்ஜித உறுதி அறிக்கை அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு, நட்ட ஈட்டுத் தொகைக்கான காசோலை 16—6—1980 அன்று அளிக்கப்பட்டு விட்டது. மீத நிலங்களைப் பொறுத்தவரை, நிலம் கையகப்படுத்தும் சட்டம்

1980 ஆகஸ்ட் 5] (திரு. கே. இராஜாமுகமது)

பிரிவு 4(1)-ன் கீழ் அறிக்கை 15—5—1979-ல் வெளியிடப்பட்டது. பிரிவு 5-ன் கீழ் நடத்த வேண்டிய விசாரணை முடிந்துவிட்டது என்றும், பிரிவுகள் 6 மற்றும் 7-ன் கீழ் உறுதி அறிவிக்கைகள் வெளியிடுவதற்கான செயற் குறிப்பை தனியே அனுப்பியிருப்பதாகவும் மாவட்ட வருவாய் அதிகாரி அரசுக்குத் தெரிவித்துள்ளார். இக்குறிப்புரை கிடைத்ததும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு கொடுப்பதில் பொதுப் பணித்துறையிலும் வருவாய் துறையிலும் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணங்கள்பற்றி பாசன தலைமைப் பொறியாளர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி ஆகிய இருவரிடமும் விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் இருந்து ஏறக்குறைய இந்தக் கால் வாய் வெட்டுவதற்காக 1976 ஆம் ஆண்டிலேயே கால்வாய் வெட்டத் தொடங்கி விட்டார்கள். அப்போதே நிலங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. நான்கு ஆண்டு காலமாக அவர்களுக்குத் தொகை வழங்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரும், வருவாய்த் துறையினரும் வேண்டும் என்றே காலதாமதம் செய்கிறார்கள். இதிலே 5 ஏக்கருக்கான பணம் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொல்கிறார். எத்தனை பேர்களுடைய நிலங்கள் எடுக்கப்பட்டன? எத்தனை பேர்களுடைய நிலங்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுவிட் டன? இன்னும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, எத்தனை பேர்கள் என்பது பற்றி குறிப்பிலே இல்லை. மொத்தமாக எடுக்கப்பட்ட நிலங்கள் 10.03 ஏக்கர். அதில் 6.55 ஏக்கருக்குப் பணம் கொடுக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிலே தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதாவது 39,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுவிட்டது. மீதி தரப்பட வேண்டியது 17,000 ரூபாய். சட்டப் பிரிவு 4(1)-ன் கீழ் நடவடிக்கை முடிந்து விட்டது. இப்போது பிரிவு 6, 7-ன் கீழ் நடவடிக்கைமேற் கொள்ளப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. அது முடிந்த உடனே இந்தப் பணமும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாக்கியிருக்கின்ற விவசாயிகளுக்கும் உடனடியாக பணம் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ? நான்கு ஆண்டுகாலமாக பொதுப்பணித்துறையினரும், வருவாய்த் துறையினரும் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட பாசன தலைமைப் பொறியாளர், மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டு இருக்கிறது. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) இந்திய மின்சார (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

---

* 1980 ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.